மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எல்லோரும் சேர்ந்துதான் அவையை பிற்பகல் 2–30 மணிக்குள் முடிக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லி அன்றைக்கு பேசினோம். உறுப்பினர்கள் பேசியதன் அடிப்படையிலேதான், நீங்கள் 12 மானியக் கோரிக்கை விவாதங்களில் பேசலாம் என்று நாம் அன்றைக்கு ஒத்துக்கொண்டோம். இன்றைக்கு நீங்கள் எல்லோரும் வற்புறுத்துகிற காரணத்தினால் நான் அதை மறு பரிசீலனை செய்து, உங்களுக்கு எல்லா நாளும் வாய்ப்புத் தருகிறேன். ஆனால், எல்லா நாளும் பேசுவதற்கு வாய்ப்பு தருகிறேன் என்று சொல்லி, உங்களுடைய உறுப்பினர்கள் நான் அனுமதிக்கிறபோது, ½ மணி நேரம், ¾ மணி நேரம் என்று அவையினுடைய நேரத்தை எடுத்துக்கொண்டால் என்னால் எதுவும் செய்ய முடியாது. காங்கிரஸ் கட்சிக்கு தினமும் 15 நிமிடங்கள் மட்டும் வாய்ப்பு அளிக்கிறேன். அதை நீங்கள் பயன்படுத்தி, இந்த அவையிலே உங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாளையிலிருந்து அந்த வாய்ப்பு வழங்கப்படும். இன்றே அது அமலுக்கு வந்துவிட்டது. (குறுக்கீடு)

3. வினாக்கள்–விடைகள் நேரத்தை குறித்த நேரத்தில் முடித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இதற்கு முன்னால் எல்லாம் என்ன செய்வார்களென்றால், கேள்வி நேரம் one hour தான். அந்த one hour ஆனவுடன் சபாநாயகர் அப்போதெல்லாம் 'மற்ற கேள்விகள் நாளைய தினம் எடுத்துக்கொள்ளப்படும்' என்று சொல்லி அப்படியே postpone செய்து correct ஆக அந்த one hour–ல் முடித்துவிடுவார்கள். அதனால் நமக்கு time save ஆகும். நீங்கள், 'அவையின் அனுமதியோடு' என்று எங்களைக் கேட்காமலே, வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது என்று நாங்கள் என்னமோ உங்களுக்கு permission கொடுத்ததுமாதிரி, 'நீட்டிக்கப்படுகிறது, நீட்டிக்கப்படுகிறது' என்று சொல்கிறீர்கள். எனவே, கேள்வி நேரம் one hour ஆகிவிட்டால் டமால் என்று bell அடித்துவிடுங்கள். அப்படி அடித்து முடித்தால், அவ்வளவுதான். Correct ஆக இருக்கும் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய உறுப்பினர்கள் இருப்பதனால் பேச முடிவதில்லை. மானியக் கோரிக்கை விவாதங்களில்கூட பேச முடிவதில்லை. இப்படி கேள்வி நேரத்தில் துணைக் கேள்வி கேட்க அனுமதிப்பதால் எல்லா உறுப்பினர்களுக்கும் பேச வாய்ப்பு கிடைக்கும். அதனால்தான் சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் அதிகமான உறுப்பினர்களுக்கு துணைக் கேள்வி கேட்பதற்கு வாய்ப்புக் கொடுக்கிறார்கள். அதுவும் இல்லையென்றால், நிறைய பேருக்கு பேசுவதற்கே வாய்ப்பு இல்லாமல் போய்விடும். ஏனென்றால், சட்டமன்றத்திற்கு வந்து பேசவில்லையென்றால், அங்கு தொகுதியில் இருக்கின்ற மக்கள் கேட்பார்கள். அதனால், துணைக் கேள்விகள் கேட்பதைப் பொறுத்தவரையில், முக்கியமான பிரச்சினையை ஒட்டித்தான் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதியில் இருக்கிற பிரச்சினைகளை அவையினுடைய கவனத்திற்கு, அந்தந்த அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, பதிலை எதிர்பார்த்துத்தான் அதைக் கேட்கிறார்கள். அதனால், துணைக் கேள்விகளைக் குறைத்து, வினாக்கள்—விடைகள் நேரத்தைக் குறைத்தால், துணைக் கேள்வி கேட்பவர்களுடைய எண்ணிக்கையும் குறைந்துவிடும்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. கேள்வி நேரத்தில் துணைக் கேள்விகள் கேட்க வேண்டியதுதான். ஆனால், இரண்டு விதமாகச் செய்யலாம். ஒன்று, சட்டசபைக் கூட்டத்தை காலை 9–30 மணிக்கு ஆரம்பிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி ஆரம்பிப்பதற்கு Rules–ல் இல்லை.

பிற்பகல் 12–15

திரு. துரைமுருகன்: சரி, Rules—ல் இல்லை என்கிறீர்களா? அப்படியென்றால், மாண்புமிகு முதலமைச்சர் ஒரு சமரசத்திற்கு வரவேண்டும். கேள்வி கேட்டால் பதில் சொல்கிற அமைச்சரும், ‘இது அமைக்கப்படுமா, அமைக்கப்படாதா’ என்று ‘டாண்’ என்று சொல்ல வேண்டும். கேள்வியைக் கேட்பவர்களும் சட்டென்று கேள்வியை மட்டும் கேட்க வேண்டும். வர்ணனைகளிலேயே பாதி நேரம் சென்றுவிடுகிறது. இரண்டு பக்கத்தில் உள்ளவர்களுக்கும்தான்

சொல்கிறேன். எனவே, இரண்டு கட்சிகளும் சேர்ந்து, இந்த வர்ணனைகளைச் செய்யாமல் இருந்தாலே பல மணி நேரங்கள் நமக்கு மீதமாக இருக்கும். அதையாவது செய்யுங்கள். இரண்டில் ஏதாவது ஒன்றைச் செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தைப் பொறுத்தவரையில், நீங்கள் சொல்கின்ற ஆலோசனைகளையெல்லாம் நான் கேட்பதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால், நிறைய உறுப்பினர்கள் புதிதாக வந்திருக்கிறார்கள். ஆர்வமாக இருக்கிறார்கள். பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்று கேட்பதனால்தான், நாம் துணைக் கேள்விகளை (குறுக்கீடு) இல்லை, ஆஸ்டின் மாதிரி பழைய உறுப்பினர்களெல்லாம் அதிக வாய்ப்பை எதிர்பார்க்காதீர்கள். வந்திருக்கின்ற புதிய உறுப்பினர்களுக்குத்தான் நான் நிறைய வாய்ப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். எனவே, துணைக் கேள்வியும் அந்த அடிப்படையில்தான் வருகிறது. ஆகவே, கேள்வி கேட்கின்ற உறுப்பினர்கள் தங்களுடைய நேரத்தை குறைத்து, கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டால், மற்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். கேள்வி நேரமும் நீடிக்காது. ஆகவே, அந்த முறையை அனைவரும் பின்பற்றி, இன்றைக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கின்ற ஆலோசனைகளை ஏற்று, நீங்கள் அனைவரும் பின்பற்றி எனக்கு ஒத்துழைக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) மத்திய அரசின் 'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' திட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலு, என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' என்கின்ற ஒரு திட்டத்தை மத்திய அரசு கொண்டு வருவதாக இரண்டு தினங்களாக பத்திரிகையிலே செய்திகள் வருகின்றன. அதுசம்பந்தமாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

மத்திய உணவுத் துறை அமைச்சர் திரு. ராம்விலாஸ் பாஸ்வான் அவர்கள் 27–6–2019 அன்று மாநில உணவுத் துறைச்